# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 23, 2023 Weekly E-paper • September 23, 2023





# தலைவிரித்தாடும் மதவெறிக் கூட்டம்!

சுப. வீரபாண்டியன்

## காவிரி நீர்ப்பங்கீடு ? உரிமையை விட முடியாது!

மதிவாணன்

## இது ஆபத்தின் அறிகுறி?

தலையங்கம்

## ‘பரதகண்ட புராதனம்’ நூல் அறிமுகம்

எழில். இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 23, 2023

Weekly E-paper ● September 23, 2023

# தலைவிரித்தாடும் மதவெறிக் கூட்டம்!

**சுப. வீரபாண்டியன்**

தந்தை பெரியார் பிறந்த நாளன்று, ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் மதத்தின் பெயரால் ஒரு காட்டுமிராண்டித்தனம் அரங்கேறி இருக்கிறது.

அந்த ஊரில் வசிக்கும் ஜான் பீட்டர் என்பவர் தன் வீட்டில், தன் உறவினர், நண்பர்களோடு ஜெபம் நடத்துவது வழக்கம். இதை அறிந்த இந்து முன்னணியினர் கடந்த 17ஆம் நாள் யாரும் அங்கு ஜெபம் செய்யக்கூடாது என்று வந்தவர்களை மிரட்டி இருக்கின்றனர். அச்சம் காரணமாக அனைவரும் திரும்பிப் போய்விட்டனர்.

ஆனால் ஜான் பீட்டர் மட்டும் அவர் குடும்பத்தினருடன் வீட்டிற்குள் ஜெபம் செய்துள்ளார். அப்போது கூட்டமாகக் கைகளில் கம்பு தடியோடு அங்கு வந்த, இந்து முன்னணியினர் சுமார் 30 பேர் வாசலிலேயே காத்திருந்திருக்கின்றனர். ஜெபம் முடிந்து வெளியில் வந்த அந்த ஆறு பேர் மீதும் கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து, அவர்களைப் பெருந்துறை மருத்துவமனையில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கின்றனர். உயிருக்குப் போராடியவர்கள் ஓரளவு நலம் பெற்று மீண்டும் இப்போது வீடு திரும்பி உள்ளார்கள். இன்றும் அவர்களின் சொந்த வீட்டிற்குப் போக முடியாமல், உறவினர்களின் வீடுகளில் தங்கி உள்ளார்கள்.

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கையும் பதிவாகியுள்ளது.

இந்நிகழ்வு, தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நல ஆணையம் மற்றும் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கும் வந்துள்ளது!

சட்டம் என்ன செய்யப் போகிறது என்பது ஒரு புறம் இருக்க, சமூகம் என்ன செய்யப் போகிறது என்பது நம் முன் இருக்கும் பெரிய வினாவாகும். சாதி வெறியும், மதவெறியும் கூடிக் கொண்டே போவது நாட்டை நாசப்படுத்தி விட்டுத்தான் ஓயும்!




ஒருவர் தன் வீட்டில் ஜெபம் செய்வது என்பது அவருடைய சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. அதனைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமைஇல்லை. காவிக் கும்பலின் மதவெறி ஆட்டம் தமிழ்நாட்டிலும் இப்போது தலைகாட்டத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, கோவை, ஈரோடு மாவட்டங்களில் மிகுதியாகிக் கொண்டே போவதைப் பார்க்க முடிகிறது.

இது வெறுமனே மதம் தொடர்புடையதன்று, முழுக்க முழுக்க அரசியல் நோக்கமுடையது. இதுபோன்ற காட்டுமிராண்டித்தனங்களால், நாட்டில் மதக் கலவரத்தை உருவாக்கி, அதில் குளிர்காய நினைப்பதுதான் அவர்களின் நோக்கம்.

அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறி, மிகச் சிறப்பாக இன்று தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு ஊறு விளைவிப்பதும் அவர்களின் இன்னொரு நோக்கம்.

இதுபோன்ற கொடூரங்கள் நிகழும் போது, தமிழ்நாடு அரசும், காவல்துறையினரும் இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நச்சுக் கலவரங்கள் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவாமல் இருக்க அது ஒன்றே வழியாகும்! ●



FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C)
TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
C 10708686

1. District: ERODE  PS: CHENNIMALAI  Year: 2023  FIR No. 236  Date: 17-09-2023

2. Act(s)  Sections
INDIAN PENAL CODE, 1860  447
INDIAN PENAL CODE, 1860  294(b)
INDIAN PENAL CODE, 1860  323
INDIAN PENAL CODE, 1860  354
INDIAN PENAL CODE, 1860  506(1)

3. (a) Occurrence of Offence Day: SUNDAY  Date From: 17-09-2023  Date To:
Time Period: On  Time from: 11.30Hrs  Time To:
(b) Information received at PS. Date: 17-09-2023  Time: 17.15Hrs  (c) General Diary Reference: Entry No(s) Time:

4. Type of Information: ORAL

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: EAST & 6.0 Km  Beat Number: BEAT II
(b) Address:
(c) In case, outside limit of this Police Station, then the Name of P.S: District:

6. Complainant/Informant (a) Name: ARJUNAN  (c) Date/Year of Birth: 1961  (d) Nationality: INDIA
(b) Father's/Husband's Name: KITTAPPANADAR
(e) Passport No.:  Date of Issue:  Place of Issue:
(f) Occupation:
(g) Address: 4/46, GEETHA MEDICAL OPPOSITE, PASUVAPATTI, CHENNIMALAI

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars

8. Reasons for delay in reporting by the complainant/informant:

9. Particulars of the properties stolen/Involved:

10. Total value of properties stolen/Involved:
11. Inquest Report/ Un-natural death Case No. If any:

1  FIR No. 236/2023

# காவிரி நீர்ப்பங்கீடு? உரிமையை விட முடியாது!

**மதிவாணன்**

கருநாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுத்து வரும் நிலையில், திமுக தலைமையிலான தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மற்றும் ஆணைய உத்தரவை செயல்படுத்த கருநாடக அரசுக்கு நீதிமன்றம் தற்போது கூறியுள்ளது.

வழக்கம் போல் கருநாடக அரசு தங்களுக்கே தண்ணீர் இல்லை என்று தன்பாட்டுக்கு ஒரு கணக்கைச் சொல்லி வந்தது. ஆனால் உண்மைத் தகவல் அறியாமலா ஆணையம் 5000 கனஅடி நீரை 15 நாள்களுக்கு திறக்க உத்தரவிட்டு இருக்கும்? ஆனாலும் கருநாடக அரசு தண்ணீர் தராமல் இழுத்தடிக்க மேலும் முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

காவிரியில் நீர் செல்லும் நாள்களை விட, வறண்ட காவிரியை காணும் நாள்களே கூடுதல்.

எப்பொழுது தொடங்கியது காவிரிச் சிக்கல்? பல நிகழ்வுகள் இதற்கு சுட்டிக் காட்டப்பட்டாலும், மற்ற தென்னிந்திய ஆறுகளுக்கு வராத சிக்கல் காவிரிக்கு மட்டும் வந்ததுள்ளது. எப்போது பார்ப்பன, நிலவுடைமை ஏகபோக அதிகாரம் முறிக்கப்பட்டதோ, உழுவோருக்கு நிலம் சொந்தம் ஆனதோ அதுமுதல் இச்சிக்கல் இருந்து வருகின்றது.

1970களில் கலைஞர் ஆட்சியில் தான் ஏழைகளுக்கு எல்லாம் நிலம் சொந்தமானது. அப்போது தொடங்கிய காவிரிச் சிக்கல் இன்று வரை நீடிக்கின்றது. பிற்படுத்தப்பட்டோர் நில உரிமை பெற்றபின், இப்பகுதியின் நீர் உரிமை பறிபோனது.

ஒரு ஆற்றின் முதல் உரிமை அதன் கடைமடைப் பகுதிக்குத் தான் என்பது உலகளாவிய விதி. அதை மதித்து பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு நீர்ப் பங்கீடு செய்கிறது இந்திய ஒன்றியம்.

அதே வேளையில் உள்நாட்டின் உள்ளேயே இருக்கும் டெல்டா பகுதியின் உரிமையை ஏன் மதிப்பதில்லை?

நீர்ப் பங்கீட்டில் கருநாடகம் சிக்கல் ஏற்படுத்துகிறது என்பதை விட, காவிரி ஆற்றில் உரிமை கோருவதையே சிக்கல் ஆக்கிவிட்டது அது.

தமிழ்நாட்டிற்கு 160 டிஎம்சி தண்ணீரைக் கருநாடகம் கொடுக்க வேண்டும். ஆனால் தங்களிடம் 53 டிஎம்சி தண்ணீர் தான் இருக்கிறது என்று நாடகம் ஆடுகிறது அது.

தமிழ்நாட்டு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், டில்லி காவிரி ஒழுங்காற்றுக் குழு, ஆணையம் என்று ஒவ்வொரு முறையும் போராடி நீரைப் பெற்று வருகிறார். சிலவேளைகளில் நீதிமன்றத்தையும் நாட வேண்டியுள்ளது.

இரண்டு மாநிலங்கள் இப்படி நீருக்காகப் போராடிக் கொண்டு இருப்பது தீர்வை நோக்கிச் செல்லாது.

இரு மாநிலங்களிலும் இருப்பவர்கள் விவசாயிகள். நீர் அவர்களுக்கு ஆதாரம்.

நிரந்தரத் தீர்வு இன்னமும் கானல் நீராக அல்லவா இருக்கிறது! ஆனாலும் தீர்வு கண்டாக வேண்டும்! அதற்காகத் தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது!



தந்தை பெரியாரின் பிறந்த நாளில், அன்பகம் பயிலரங்கத்தில் ஐயா படத்திற்குப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், எழில்.இளங்கோவன் மாலை அணிவித்து. மரியாதை செலுத்தினார்கள். உடன் தோழர்கள் சண்முகநாதன், எட்வின், கார்த்தி.




தந்தை பெரியார் பிறந்த நாளில் அன்பகம், பயிலரங்கத்தின் போது திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் சமூக நீதிக்கான உறுதி மொழிகளை முன்மொழிய, அதை வழிமொழிந்து தோழர்கள் அனைவரும் உறுதி ஏற்றுக் கொண்டார்கள்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இது ஆபத்தின் அறிகுறி?

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியால் 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 42 ஆம் திருத்தத்தின் படி "செக்யூலர்" "சோஷலிஸ்ட்" ஆகிய முக்கிய இரண்டு வார்த்தைகள் சேர்க்கப்பட்டன.




1950களில் அரசமைப்பு முன்னுரையில் இவை இடம்பெறாவிட்டாலும், மதச்சார்பின்மை சமத்துவத்தின் அவசியம் கருதி செக்யூலர், சோஷலிசம் என்பது பின்னர் சேர்க்கப்பட்டது. இது ஒரு மாற்றம். மாற்றம் வளர்ச்சியைத் தருகிறது என்றால் அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது இந்திய அரசமைப்பு மதச்சார்பற்ற, சமத்துவமானது என்பதை உறுதி செய்வதாக அமைகிறது.

மாறாக ஆர்.எஸ்.எஸ். கொள்கையைச் சுமந்து கொண்டு காவிகளும், வலதுசாரிகளும் அந்தச் சொற்களை அரசமைப்பு முன்னுரையில் இருந்து நீக்க வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

அதை ஏற்றுக் கொள்வது போல புதிய நாடாளுமன்ற அவையில் நடைபெற்ற நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தின் போது, கொடுக்கப்பட்ட அரசியலமைப்பு முன்னுரைப் பிரதிகளில் செக்யூலர், சோஷலிஸ்ட் என்ற இரண்டு பெயர்களும் நீக்கப்பட்டு இருந்ததாகவும், அது வேண்டும் என்றே நீக்கம் செய்திருக்கலாம் எனறும் காங்கிரஸ் கட்சியின் ஆதிரஞ்சன் தன் அச்சத்தைத் தெரிவித்துள்ளார்.

இது மதச்சார்பின்மைக்கும், சமத்துவத்திற்கும் ஆபத்தான அறிகுறி. மதவாதத்தின் இந்தப் போக்கு கண்டனத்திற்கு உரியது.

சில மாதங்களில் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் பா.ஜ.கவை விட, இந்தியா கூட்டணியைப் பெரும்பான்மையில் வெற்றி பெறச் செய்து, பா.ஜ.வைத் தோற்கடிக்க வேண்டும்.

இதுதான் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க வினால் ஏற்படப் போகும் ஆபத்துகளைத் தடுக்கும் வழி.



தந்தை பெரியாரின் 145 ஆம் பிறந்த நாளையொட்டி சென்னை, அண்ணாசாலை சிம்சன் எதிரில் இருக்கும் ஐயாவின் சிலைக்கு 17-09-2023 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள்ளட்வின், கார்த்தி, இளமாறன், அன்பு, சண்முகநாதன், சாரதாதேவி, லோகபாலன், திராவிடமணி, தீபன் இணையருடன், திராவிட நட்புக் கழக தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# ராபர்ட் கால்டுவெல் எழுதிய ‘பரதகண்ட புராதனம்’

நூல் அறிமுகம்

**எழில். இளங்கோவன்**

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் டாக்டர் ராபர்ட் கால்டுவெல். ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ (1856) என்ற நூலை எழுதி உலகப் புகழ் பெற்ற இவர், தமிழில் எழுதிய நூல் ‘பரதகண்ட புராதனம்’ (1871).




வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் பற்றிய அருமையான விமர்சனங்களையும், விளக்கங்களையும் இந்நூலில் காணலாம். வேதங்களையும், இதிகாசங்களையும், புராணங்களையும் மூன்று பாகங்களாகச் சொல்லி இருந்தாலும் அவைகளை ஒப்பீடு செய்கிறார் கால்டுவெல்.

ரிக்வேதத்தில் பாடிப் புகழ்ந்த இந்திரன், அக்கினி, சோமன், உஷை போன்ற கடவுள்கள் வால்மீகியின் இராமாயணம், வியாசரின் மகாபாரதம் ஆகிய இதிகாச காலத்தில் இல்லை, மறைந்து போனார்கள். மாறாக பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய கடவுள்கள் இங்கே வந்து விட்டார்கள்.

ரிக்வேதத்தில் யாகம் (வேள்வி) தான் முதன்மையானது. இதிகாசத்தில் யாகம் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் காடுகளில் தவம் செய்வது முன்னிலையில் வந்து நின்றது.

ரிக்வேதத்தில் விஸ்வாமித்திரர், வசிஸ்டர் இருவரும் சுதாஸ் என்ற பார்ப்பன மன்னனுக்கு இராஜகுருவாக, புரோகிதராக இருந்தார்கள். 500 ஆண்டுகளுக்குப் பின் இராமாயணத்தில் அவர்கள் இருவரும் தவக்கோல ரிஷிகளாகக் காட்டப்படுகிறார்கள்.

இராமாயணம் எழுதிய வால்மீகி 500 ஆண்டுகளுக்கு முன்னரே ரிக்வேத ரிஷியாய் இருந்தார் என்பதெல்லாம் முரணாக இருக்கிறது.

இராமனின் மகன் லவன், குசன் என்ற இருவர் என்பது தவறு. லவகுச என்பது ஒரேபெயரே ஒழிய இருவர் இல்லை. வால்மீகி, இராமாயணம் சொல்லும் போது அருகே இருந்து அந்தக் கதையை மனப்பாடம் செய்து, ஊர்தோறும் பாடி கதையைப் பரப்பும் வேலையைச் செய்த அரண்மனைக் கவிராயர்களில் ஒருவரே இந்த லவகுச.

இராமயணமும், மகாபாரதமும் கதைகளின் தொகுப்பு. அவை கற்பனைகள். இராமாயணம் எழுதியவருக்குத் தென்னிந்திய மக்களைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. சில ரிஷிகள் விந்திய மலைக்குத் தெற்கே வந்திருக்கிறார்கள். அவர்களின் தோற்றமும், பிற நடவடிக்கைகளும் ஏற்றுக் கொள்ள முடியாமல் அந்த ரிஷிகளை இங்குள்ள திராவிட மக்கள் விரட்டியடித்தார்கள். அதனால் திராவிட மக்களை எதிரிகள் எனறும் ‘இராட்சதர் ‘ என்றும் ‘குரங்குகள்’என்றும் இராமாயணத்தில் எழுதி விட்டார்கள்.

இப்படித்தான் புராணங்களும் என்று தன் விமர்சன விளக்கங்களை இந்நூலில் தருகிறார், கால்டுவெல்.

யாகம், ரிக்வேத காலத்திற்கு உரியது.

தவம், இராமாயண காலத்திற்கு உரியது.

தீர்த்த யாத்திரை, மகாபாரத காலத்திற்கு உரியது.

கோயில் பூசைகள், புராண காலத்திற்கு உரியது.

இந்தக் காலங்களில் எல்லாம் பேசப்படாத, எழுதப்படாத இந்து மதம் என்பது இங்கே தனியாக நிற்கிறது என்பதை இந்நூலைப் படிப்பவரின் சிந்தனையில் கொண்டு வந்து நிறுத்துகிறார், டாக்டர் இராபர்ட் கால்டுவெல்.

நூலைப் பதிப்பித்தவர்: **பொ.வேல்சாமி.**
வெளியீடு: **என்.சி.பி.எச்.**




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத் தோழர்கள் “ ஹிட்லர் “ என்ற தலைப்பில் 18 ஆம் பயிலரங்கத்தை சென்னை அன்பகத்தில் நடத்தினார்கள். தோழர்கள் செங்கொடி வரவேற்றார், எட்வின் தொகுத்துரைத்தார். பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் கருத்தாழமிக்க, ‘ஹிட்லர் ‘குறித்த பயிலரங்க உரையின் பின்னர் தோழர்களின் .கேள்விகளுக்கு அவர் விளக்கம் அளித்தார். தோழர் கார்த்திக் நன்றி கூற பயிலரங்கம் நிறைவுற்றது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408